IHP
INSTITUTE FOR HEALTH POLICY

72, Park Street, Colombo 2, Sri Lanka
Tel: +94 11 231 4041/2/3/5 Fax: +94 11 231 4040
e-mail: info@ihp.lk web: www.ihp.lk twitter: @ihplk

## ஊடக அறிவிப்பு

**திகதி வரை தடையாணை**
திகதி : 10 September 2024
நேரம் : 05:00 PM Sri Lanka Time

**மேலதிக தகவல்களுக்கு தொடர்பு கொள்ளவும்**

செயலாளர்/நிர்வாகி
மின்னஞ்சல் : info 'at' ihp.lk
**பிரதான ஆராய்ச்சியாளருடன் தொடர்புகொள்ள**
மருத்துவர். ரவி ரன்னன்-எலிய
மின்னஞ்சல் : ravi 'at' ihp.lk ட்விட்டர் : @ravirannaneliya

# தேர்தலை நோக்கிய பிரச்சார காலத்தில் 2024 ஆம் ஆண்டு முன்னணி ஜனாதிபதி வேட்பாளர்களுக்கான ஆதரவில் ஏற்பட்ட மாற்றங்கள்

*ஆகஸ்ட் 2024 IHP MRP மாதிரியின் பகுப்பாய்வு*

2024 ஆம் ஆண்டின் முதல் பாதியில், ஒரு சாத்தியமான ஜனாதிபதி வேட்பாளராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவில் அதிகரிப்பு காணப்பட்டமையும், இது என்.பி.பி., எஸ்.ஜே.பி. மற்றும் எஸ்.எல் .பி. பி. கட்சிகளின் சாத்தியமான வேட்பாளர்களுக்கான ஆதரவு குறைந்ததன் விளைவாக ஏற்பட்டதாகக் காணப்பட்டதும் வாக்காளர் தீர்மானத்தில் ஏற்பட்ட மிகவும் குறிப்பிடத்தக்க மாற்றங்களாகும். IHPன் MRP (மல்டிலெவல் ரிக்ரெஷன் மற்றும் போஸ்ட் ஸ்றாற்றிபிகேஷன் முறை) மாதிரியின் மதிப்பீடுகளின் படி என்.பி.பி. தலைவரான அனுர திசாநாயக்க, எஸ்.ஜே.பி. தலைவர் சஜித் பிரேமதாச, மற்றும் யாராகிலும் ஒரு எஸ்.எல் .பி.பி. வேட்பாளர் ஆகியோரின் ஆதரவு இவ்வருடத்தின் முதல் இரண்டு மாதங்களிலிருந்து 2024 ஜூன்/ஜூலை மாதத்திற்கு முறையே 7%, 1%, மற்றும் 5% ஆல் குறைந்தது. இதன் பிரதான பயனாளியாக ஜனாதிபதி விக்கிரமசிங்க காணப்பட்டார். இரண்டு மடங்கிற்கு மேல் அதிகரிப்பை பார்த்த அவருக்கான ஆதரவு, அதே காலக்கட்டத்தில் 13% ஆல் அதிகரித்து 22% ஆனது. இருப்பினும் அவர் மூன்றாவது இடத்திலேயே பின் தங்கியுள்ளார்.


இந்த மாற்றங்களை ஏற்படுத்திய முக்கிய காரணங்களை விளக்கும் நோக்கத்தோடு, வெவ்வேறு மக்கள்தொகைக் குழுக்களுக்களில் தற்போதைய முன்னணி வேட்பாளர்களுக்கான ஆதரவு எவ்வாறு மாறியது என்பதைப் பார்க்க,


ஆகஸ்ட் 2024 வாக்காளர் தீர்மான MRP மாதிரியின் மதிப்பீடுகளில் ஏற்பட்ட மாற்றங்களை இந்த பகுப்பாய்வு மேலும் ஆராய்கிறது.


என்.பி.பி. தலைவரான அனுர திசாநாயக்க, பெரும்பாலான மக்கள்தொகை குழுக்களில் ஆதரவை இழந்திருக்கிறார். இதில் மிகப் பெரிய இழப்புகள் அவர் நம்பிக்கையுடன் இருந்த அவரது அடிப்படைத் தளமான, வசதிபடைத்தவர்கள், சிங்களவர் மற்றும் இளைஞர் (18-29 வயது) வாக்காளர் மத்தியில் காணப்படுகின்றது. இவற்றில் அவரின் ஆதரவு முறையே 12, 9, மற்றும் 17 புள்ளிகளால் குறைந்திருக்கின்றது. மக்கள் போராட்டத்திற்கு (அரகலய) சாதகமான எண்ணமுடைய வாக்காளர்களிடையே ஆதரவு 9% குறைந்திருக்கின்றது – இது சஜித் பிரேமதாச சந்தித்ததை விட பெரிய வீழ்ச்சி, இருந்தாலும் அவர் இந்த வாக்காளர்களிடையே தனது எதிரணிகளை விட வலுவான முன்னிலையைத் தக்க வைத்துக்கொண்டுள்ளார். அதேபோல், 2019 தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷ அல்லது சஜித் பிரேமதாசவிற்கு வாக்களித்த வாக்காளர்களிடமும் அனுர திசாநாயக்க ஆதரவை இழந்துள்ளார். இருப்பினும், 2019 ஜனாதிபதி தேர்தலில் தனக்கு வாக்களித்தவர்களைத் தக்க வைத்துக்கொள்ள முடிந்ததாக MRP மதிப்பீடுகள் காட்டுகின்றன.


சஜித் பிரேமதாசவும், பெரும்பாலான மக்கள்தொகை குழுக்களில் தனது ஆதரவை இழந்தார். குறிப்பாக, முதியவர்கள் மத்தியில் (60+ வயதுக்கு மேல்) அவரது மிகப்பெரிய இழப்பு நேர்ந்ததுடன், ஆதரவு 9 புள்ளிகளால் குறைந்தது. ஆனால், ஏழை இலங்கையர்கள் (+3) மற்றும் முஸ்லிம்கள் (+4) மத்தியில் அவர் தனது ஆதரவை ஸ்திரப்படுத்தினார். இவ் இரண்டு குழுக்களிலும் அவர் ஏனைய சாத்தியமான வேட்பாளர்களை விட முன்னிலையில் இருக்கிறார்.

அனுர திசாநாயக்க மற்றும் சஜித் பிரேமதாசவிடம் இருந்து அகன்ற ஆதரவு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு பாரிய ஆதாயமாக காணப்படுகின்றது. முஸ்லிம்களைத் தவிர, அனைத்து மக்கள்தொகை குழுக்களுக்கு மத்தியிலும் அவரது ஆதரவு அதிகரித்தது. இது பெண்கள் மத்தியில் அதிகரித்த ஆதரவை உள்ளடக்கியது (ஆண்கள் +8% உடன் ஒப்பிடுகையில் +17%). எனவே பெண்கள் மத்தியில் அவருக்கான ஆதரவு மேம்பட்டது. அவருக்கு சாதகமாக ஏற்பட்ட பெரிய மாற்றங்கள், வசதியானவர்கள் (+17), சிங்களவர்கள் (+16), முதியோர் (+24), மற்றும் முன்னாள் கோட்டாபய ராஜபக்சவின் வாக்காளர்கள் (+20) மத்தியில் காணப்பட்டன. ஆனால், குறிப்பிடத்தக்க மிகப்பெரிய மாற்றம் மக்கள் போராட்டத்திற்கு (அரகலய) எதிரான வாக்காளர்கள் மத்தியில் ஏற்பட்டது. இவர்களிடம் அவர் 26 புள்ளிகளைப் பெற்று ஏனைய சாத்தியமான வேட்பாளர்களையும் விட முன்னிலை வகித்தார். ஜனாதிபதி விக்கிரமசிங்க கணிசமான அளவிற்கு, அரசு/ராஜபக்ஷ/எஸ்.எல்.பி .பி .க்கு ஆதரவான அடிப்படை வாக்குகளின் பெரும் பயனாளியாக இருந்துள்ளார், இது இந்த ஆண்டின் முதல் பாதியில் அனைத்து மக்கள்தொகை குழுக்களுக்கு மத்தியிலும் பெருமளவில் வீழ்ச்சியடைந்திருந்தது.


தேர்தல் 2024
மக்கள் தொகை குழுக்களின்படி அ கு திஸாநாயக்கவிற்கான ஆதரவில் மாற்றங்கள், ஜன./பிப். 2024 முதல் ஜூன்/ஜூலை 2024
ஜூன் - ஜூலை 2024
ஜன. - பிப். 2024
ஒட்டுமொத்த -7%
ஆண் -7%
பெண் -7%
வறியவர் -4%
நடுத்தரம் -6%
வசதியானவர்கள் -12%
சிங்களவர் -9%
இலங்கைத் தமிழர் -3%
பெருந்தோட்டத்/இந்தியத் தமிழர் +5%
முஸ்லிம் -4%
வயது 18 - 29 -17%
30–59 -5%
60+ -2%
2019 வாக்களிப்பு: கோ ராஜபக்ஷ -6%
2019 வாக்களிப்பு: ச பிரேமதாசா -7%
2019 வாக்களிப்பு: அ கு திஸாநாயக்க +2%
அரகலய: சாதகமான எண்ணம் -9%
அரகலய: எதிரான எண்ணம் -7%
0% 10% 20% 30% 40% 50% 60% 70% 80% 90% 100%
சுகாதார கொள்கை நிறுவனம் இலங்கை கருத்துக்கணிப்பு ஆய்வு MRP
டிச. 1 2021 முதல் ஆக. 19 2024 வரை நடத்தப்பட்ட பேட்டிகளிலிருந்து பெறப்பட்ட பதில்களை அடிப்படையாகக்கொண்ட MRP மாதிரியின் மூலம் ஆதரவில் மாற்றங்கள் மதிப்பிடப்பட்டன. MRP மதிப்பீடுகள், தேசிய மக்கள்தொகையின் மக்கள்தொகை பண்புகள் மற்றும், 2019 மற்றும் 2020 வாக்களிப்பு வரலாறுக்கும் பொருந்துமாறு அளவீடு செய்யப்பட்டுள்ளன. எஸ்.எல்.பி.பி. என்பது முதலில் "ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ" வை குறிப்பிட்டது. ஆனால் இப்பொழுது பதிலளிப்பவர்கள் "கோட்டாபய ராஜபக்ஷ அல்லது எஸ்.எல்.பி.பி. உறுப்பினர்" என்று கேட்கப்படுகிறார்கள்.
IHP
INSTITUTE FOR HEALTH POLICY


தேர்தல் 2024
மக்கள் தொகை குழுக்களின்படி சஜித் பிரேமதாசவிற்கான ஆதரவில் மாற்றங்கள், ஜன./பிப். 2024 முதல் ஜூன்/ஜூலை 2024
ஜூன் - ஜூலை 2024
ஜன. - பிப். 2024
ஒட்டுமொத்த -1%
ஆண் +2%
பெண் -3%
வறியவர் +3%
நடுத்தரம் -4%
வசதியானவர்கள் -1%
சிங்களவர் -1%
இலங்கைத் தமிழர் -5%
பெருந்தோட்டத்/இந்தியத் தமிழர் -7%
முஸ்லிம் +4%
வயது 18 - 29 +12%
30–59 -4%
60+ -9%
2019 வாக்களிப்பு: கோ ராஜபக்ஷ -4%
2019 வாக்களிப்பு: ச பிரேமதாசா -1%
2019 வாக்களிப்பு: அ கு திஸாநாயக்க -3%
அரகலய: சாதகமான எண்ணம் -3%
அரகலய: எதிரான எண்ணம் -7%
0% 10% 20% 30% 40% 50% 60% 70% 80% 90% 100%
சுகாதார கொள்கை நிறுவனம் இலங்கை கருத்துக்கணிப்பு ஆய்வு MRP
டிச. 1 2021 முதல் ஆக. 19 2024 வரை நடத்தப்பட்ட பேட்டிகளிலிருந்து பெறப்பட்ட பதில்களை அடிப்படையாகக்கொண்ட MRP மாதிரியின் மூலம் ஆதரவில் மாற்றங்கள் மதிப்பிடப்பட்டன. MRP மதிப்பீடுகள், தேசிய மக்கள்தொகையின் மக்கள்தொகை பண்புகள் மற்றும், 2019 மற்றும் 2020 வாக்களிப்பு வரலாறுக்கும் பொருந்துமாறு அளவீடு செய்யப்பட்டுள்ளன. எஸ்.எல்.பி.பி. என்பது முதலில் "ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ" வை குறிப்பிட்டது. ஆனால் இப்பொழுது பதிலளிப்பவர்கள் "கோட்டாபய ராஜபக்ஷ அல்லது எஸ்.எல்.பி.பி. உறுப்பினர்" என்று கேட்கப்படுகிறார்கள்.
IHP


தேர்தல் 2024
மக்கள் தொகை குழுக்களின்படி ரணில் விக்ரமசிங்கவிற்கான ஆதரவில் மாற்றங்கள், ஜன./பிப். 2024 முதல் ஜூன்/ஜூலை 2024
ஜன. - பிப். 2024
ஜூன் - ஜூலை 2024
ஒட்டுமொத்த +13%
ஆண் +8%
பெண் +17%
வறியவர் +8%
நடுத்தரம் +14%
வசதியானவர்கள் +17%
சிங்களவர் +16%
இலங்கைத் தமிழர் +6%
பெருந்தோட்டத்/இந்தியத் தமிழர் +2%
முஸ்லிம் -0%
வயது 18 - 29 +5%
30–59 +13%
60+ +24%
2019 வாக்களிப்பு: கோ ராஜபக்ஷ +20%
2019 வாக்களிப்பு: ச பிரேமதாசா +8%
2019 வாக்களிப்பு: அ கு திஸாநாயக்க +1%
அரகலய: சாதகமான எண்ணம் +16%
அரகலய: எதிரான எண்ணம் +26%
0% 10% 20% 30% 40% 50% 60% 70% 80% 90% 100%
சுகாதார கொள்கை நிறுவனம் இலங்கை கருத்துக்கணிப்பு ஆய்வு MRP
டிச. 1 2021 முதல் ஆக. 19 2024 வரை நடத்தப்பட்ட பேட்டிகளிலிருந்து பெறப்பட்ட பதில்களை அடிப்படையாகக்கொண்ட MRP மாதிரியின் மூலம் ஆதரவில் மாற்றங்கள் மதிப்பிடப்பட்டன. MRP மதிப்பீடுகள், தேசிய மக்கள்தொகையின் மக்கள்தொகை பண்புகள் மற்றும், 2019 மற்றும் 2020 வாக்களிப்பு வரலாறுக்கும் பொருந்துமாறு அளவீடு செய்யப்பட்டுள்ளன. எஸ்.எல்.பி.பி. என்பது முதலில் "ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ" வை குறிப்பிட்டது. ஆனால் இப்பொழுது பதிலளிப்பவர்கள் "கோட்டாபய ராஜபக்ஷ அல்லது எஸ்.எல்.பி.பி. உறுப்பினர்" என்று கேட்கப்படுகிறார்கள்.
IHP




## மேலும் விவரங்கள் ihp.lk ல் இருந்து கிடைக்கும்

Institute for Health Policy, September 2024, “Changes in support for the leading Presidential candidates during 2024 in the lead up to the campaign period. Analysis of IHP MRP August 2024 model estimates”.
*Available at:* [https://ihp.lk/research-updates/changes-support-leading-presidential-candidates-during-2024-lead-campaign-period](https://ihp.lk/research-updates/changes-support-leading-presidential-candidates-during-2024-lead-campaign-period)

Institute for Health Policy, August 2024, “AK Dissanayake and Sajith Premadasa lead neck and neck in July voting intent, but support for Pres. Ranil Wickremesinghe surges. IHP/SLOTS MRP Presidential Election Voting Intention Update July 2024”.
*Available at:* [https://www.ihp.lk/press-releases/ak-dissanayake-and-sajith-premadasa-lead-neck-and-neck-july-voting-intent-support](https://www.ihp.lk/press-releases/ak-dissanayake-and-sajith-premadasa-lead-neck-and-neck-july-voting-intent-support)

## IHP பற்றி

IHP கொழும்பு, இலங்கையில் உள்ள சுயாதீனமான மற்றும் கட்சிசார்பற்ற ஆய்வு மையம். SLOTS ஆய்வின் பிரதான ஆய்வாளர் மருத்துவர் ரவி ரன்னன்-எலிய ஆவார். இவர் பொது கருத்துக்கணிபுகளில் ஹார்வார்ட் பல்கலைக்கழகத்தில் பயிற்சி பெற்றதோடு மூன்று தசாப்தங்களாக பல்வேறு ஆய்வுகளை நடத்திவருகிறார்.

## முறைமை விவரங்கள்

IHP இன் SLOTS கருத்துக்கணிப்பு, ஒரு கலப்பு கூறில் உள்ள பதிலளிப்பவர்களுடன் தொலைபேசி மூலம் பேட்டிகள் நடத்தும் ஒரு ஆய்வு ஆகும். இதில் பின்வருபவர்கள் உள்ளடங்குவார்கள்: (i) முன்தேர்வு இல்லாமல் எழுமாற்றாக அதாவது சரிசம வாய்ப்புடன் அழைக்கப்பட்ட கைத்தொலைப்பேசி [(Random Digit Dialling of mobile numbers (RDD sample)] மூலம் தொடர்புகொண்ட

வயது வந்தவர்கள் (18+ வயது) ; மற்றும் (ii) நாடு முழுவதும் பிரதிநிதித்துவப்படுத்தும் விதத்தில் IHP ஆல் முன்பே ஆட்சேர்க்கப்பட்ட வயது வந்தவர்களின் கூட்டு கூறில் (cohort sample) உள்ளவர்கள். இந்த கூட்டு கூறு (cohort sample), வயது, பால்நிலை, இனம் மற்றும் சமூகப் பொருளாதார நிலையைப் பொறுத்து நன்கு சமநிலைப்படுத்தப்பட்டுள்ளது. இது ஆரம்பத்தில் 2019 இல் இலங்கையின் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள 300 கிராம அலுவலர் பிரிவுகளிலிருந்து தேர்வு செய்யப்பட்ட அடுக்கமைவு நிகழ்தகவு கூறு ஆகும் (stratified probability sample). காலப்போக்கில், SLOTS கூறு கூடுதலாக RDD பதிலளிப்பவர்களின் கலவையாக மாறியுள்ளது. கூட்டுக்கூறிற்கு சேர்க்கப்பட்ட பதிலளிப்பவர்கள் தொடரப்படுவதன் முதன்மை காரணம் ஒட்டுமொத்த கூறினை அளவீடு செய்வதற்காக.

ஒட்டுமொத்த SLOTS கூறுகள் அனைத்து மாவட்டங்கள், வயது, இனக்குழுக்கள், மதங்கள், துறைகள் மற்றும் சமூக பொருளாதார நிலைகளை உள்ளடக்கியவையாக உள்ளன. வெளியிடப்பட்ட அனைத்து SLOTS கருத்துக்கணிப்பு மதிப்பீடுகளும் வயது, பால்நிலை, இனம், மாகாணம், துறை, கல்வி மற்றும் சமூகப் பொருளாதார நிலை ஆகியவற்றிற்கான தேசிய மக்கள்தொகையுடன் பொருந்துமாறு எடையிடப்பட்டுள்ளன. வாக்காளர் தீர்மானத்தின் பகுப்பாய்விற்கு, மதிப்பீடுகள் மேலும் வாக்களிப்பு வரலாற்றுடன் (ஜனாதிபதி தேர்தல் 2019, பொதுத் தேர்தல் 2020) பொருத்தப்படுகின்றன.

இந்த ஆய்வில் உள்ளடக்கப்பட்ட காலப்பகுதியில் ஜனாதிபதித் தேர்தல் வாக்காளர் தீர்மானத்தைப்பற்றி கேட்கும்பொழுது, ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாச, அனுர குமார திஸாநாயக்க மற்றும் எஸ் .எல் . பி .பி. சார்ந்த ஒரு பொது வேட்பாளர் ஆகியோர் அடங்கிய குறுகிய பட்டியலிலிருந்து தேர்ந்தெடுக்குமாறு பதிலளிப்பவர்களிடம் SLOTS நேர்காணல்கள் கேட்டன.

IHP இன் SLOTS MRP வாக்காளர் தீர்மானம் மதிப்பீடுகள், சாமான்ய கருத்துக் கணிப்புகளைப் போல் கருத்துக் கணிப்பு பதில்களின் எடையிடப்பட்ட நேரடி தொகுப்பு அல்ல. முதலில், வாக்களிப்பு வரலாறு பற்றிய கேள்விகளுக்கும் வாக்களிப்பு தீர்மானம் பற்றிய கேள்விகளுக்கும் பதிலளிக்காதவர்கள் மற்றும் மறுப்பவர்களின் பதில்கள், மல்டிபல் இம்ப்யூடேஷன் மாதிரிகள் (multiple imputation models) என்னும் புள்ளியியல் முறை மூலம் கையாளப்படுகின்றன. இவை பதிலளிப்பவர்களின் பல்வேறு பண்புகளை கருத்தில் கொண்டு, அவர்கள் யாருக்கு வாக்களித்திருக்கலாம் அல்லது யாருக்கு வாக்களிக்கலாம் என்பதற்கான சாத்தியமான பகிர்மானத்தை மதிப்பீடு செய்கின்றன. இரண்டாவதாக, வாக்காளர் தீர்மானம், மல்டிலெவல் ரிக்ரெஷன் மற்றும் போஸ்ட் ஸ்றாற்றிபிகேஷன் (Multilevel Regression and Post-Stratification - MRP) மாதிரியாக்கத்தைப் பயன்படுத்தி மதிப்பீடு செய்யப்படுகின்றது. MRP, முதலில் பதிலளிப்பவர்களின் பண்புகளை அடிப்படையாகக் கொண்டு, அவர்களது வாக்கு விருப்பத்தை மாதிரிப்படுத்தும், பின்னர் அனைத்து வயது வந்தோர் மக்கள்தொகையுமே எப்படி வாக்களிக்குமென்று கணிக்க மதிப்பிடப்பட்ட மாதிரி அளவுருக்களைப் பயன்படுத்துகின்றது. MRP முறையானது, பொதுவாக கணிக்கப்படும் கணக்கெடுப்பு பிழைகளை மதிப்பீடு செய்ய பொருத்தமானதல்ல. எனவே IHP, அதன் மாதிரி கணிப்புகளில் உள்ள நிச்சயமற்ற தன்மையை மதிப்பிடுவதற்கு, மல்டிபல் இம்ப்யூடேஷன் (multiple imputation approach) அணுகுமுறையைப் பயன்படுத்துகின்றது. மேலும் இது பிழை விளிம்பு (margin of error) என்று தரப்படுகிறது. குறிப்பாக, பிழை விளிம்பு

என்பது IHP இன் வாக்காளர் தீர்மானத்தின் உண்மையான அளவின் வீச்சின் சிறந்த மதிப்பீடை குறிக்கின்றது. 95% நேரம் மதிப்பீடு இந்த வீச்சிற்குள் இருக்கும். இங்குள்ள MoE ஆனது, கூறில் காணக்கிடைத்த தரவுகளுக்கு MRP மாதிரி எவ்வாறு பொருந்துகின்றது என்று கூறுவதில் உள்ள நிச்சயமற்ற தன்மையையும், வழமையாக கணிக்கப்படும் கூறெடுத்தல் இரைச்சலையும் குறிக்கின்றது. எவ்வாறாயினும், ஒரு கட்சியின் ஆதரவாளர்களை தொலைபேசி மூலம் அணுகக்கூடிய வாய்ப்பு அல்லது அவர்கள் பேட்டிக்கு ஒப்புக்கொள்வது குறைவாகவுள்ளபோது, கூறு-அல்லாத பக்கச்சார்பு காரணமாக எழக்கூடிய எந்த முறையான பிழைகளையும் இது காட்டுவதில்லை.

இங்கு அறிக்கையிடப்பட்ட பகுப்பாய்வு ஜனவரி/பிப்ரவரி 2024 இல் நடத்தப்பட்ட 1,077 நேர்காணல்கள் மற்றும் ஜூன்/ஜூலை 2024 இல் நடத்தப்பட்ட 1,146 நேர்காணல்கள் உட்பட, 1 டிசம்பர் 2021 முதல் 19 ஆகஸ்ட் 2024 வரை நடத்தப்பட்ட 18,206 நேர்காணல்களின் பதில்களின் அடிப்படையில் கணிக்கப்பட்ட மாதிரியில் இருந்து. ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாச மற்றும் ஏ.கே.திஸாநாயக்க ஆகியோருக்கு பிழை விளிம்புகள் 2-4% என மதிப்பிடப்பட்டுள்ளது.

## நிதியுதவி

முன்பு SLOTS ஆய்விற்கு நீலன் திருச்செல்வம் அறக்கட்டளை, ஆசியா மன்றம்(The Asia Foundation), ஐரோப்பிய கமிஷன், ஐக்கிய ராஜியத்தின் உடல்நலம் பராமரிப்பு ஆராய்ச்சிக்கான தேசிய நிறுவனம், தி பவுண்டேஷன் ஓபன் சொசையடி இன்ஸ்டிட்யூட் மற்றும் ஏனையோர் நிதி வழங்கினர். தற்போதைய கள வேலைகளுக்கான நிதி IHPன் பொது நல ஆய்வு நிதி மற்றும் பிறரால் வழங்கப்படுகின்றது. ஆய்வின் வடிவமைப்பிலோ, பகுப்பாய்விலோ மற்றும் கண்டுபிடிப்புகளின் பொருள்விளக்கத்திலோ ஆதரவாளர்கள் பங்கு வகிக்கவில்லை. அதோடு ஆய்வின் கண்டுபிடிப்புகள் முந்தைய மற்றும் தற்போதைய நிதி வழங்குனர்களின் எண்ணங்கள் மற்றும் கருத்துக்களை பிரதிப்பலிப்பன அல்ல. மேலும் விவரமான தரவுகள் மற்றும் முடிவுகளை பெற விரும்பும் நபர்கள் IHP உடன் தொடர்பு கொள்ளலாம்.

**பின்குறிப்பு:** கலைச்சொற்கள் சரிபார்த்தப்பின் இந்த மொழிபெயர்ப்பு புதுபிக்கப்படும்